**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**STC.NO-254/2023**

**List of Witness LW 1 Examined as PW1 ( Defacto Complainant )**

| Name | லெட்சுமி நாராயணன் | Age: | 44 |
|---|---|---|---|
| Father's name | கணபதி | Calling: | நடத்துனர் |
| Village | புதுக்கோட்டை | Taluk | புதுக்கோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.10.2025
(எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து புதுக்கோட்டை வைரம் பள்ளிப் பேருந்து நடத்துனராக பணி செய்து வருகிறேன். எனது சொந்த ஊர் வல்லம். கடந்த 23.10.2022 ஆம் தேதி, தீபாவளிக்கு முதல் நாள் வல்லத்திற்கு எனது அம்மாவை பார்க்க சென்றேன். எனது அம்மாவை பார்த்துவிட்டு திரும்பி புதுக்கோட்டை செல்வதற்காக, தஞ்சாவூர் -புதுக்கோட்டை மெயின் ரோட்டில் எனது ஹீரோ ஹோண்டா ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தில், ஆதனக்கோட்டைக்கு முன்பாக சென்று கொண்டிருந்த போது, ஒரு வயதான நபர் சாலையில் விழுந்து கிடந்தார். அவரை தூக்கிக் கொண்டிருந்த போது, எனக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனம் என் மீது மோதியதால், நான் குப்புற கீழே விழுந்து விட்டேன். அதனால், எனது இடது கையிலும், வலது காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டது. அதற்காக அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தற்போது ஸ்டீல் வைக்கப்பட்டுள்ளது. பின்னர், 108 ஆம்புலன்ஸ் மூலமாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சை அளிக்க தாமதம் ஆனதால் புதுக்கோட்டையில் உள்ள முத்துராஜா தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கு 10 நாள்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருந்த போது, போலிசார் என்னை விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **(மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சம்பவத்தின் போது, சம்பவ இடத்தில் நான் மேற்படி விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபரை பார்க்கவில்லை. மறுநாள் போலிசார் ராஜா என்ற நபர் மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்ததாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) மருத்துவமனையில் மருத்துவர் என்னிடம் காயம் எவ்வாறு ஏற்பட்டது என்றும் எனது பெயர், முகவரி என்ன என்றும் கேட்டார்கள் என்றால் சரிதான். மருத்துவரிடம், எனது முகவரி 15/A, ரெட்டிப்பாளையம் ரோடு, தஞ்சாவூர் என்று சொன்னேன் என்றால் சரிதான். 23.10.2022 ஆம் தேதி மாலை 7.10 மணியளவில், கோவில்பட்டி என்ற இடத்தில், விபத்து நடைபெற்றதாக மருத்துவரிடம்சொன்னேன் என்றால் சரிதான். எனக்கு வெளிக்காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான், வாயிலிருந்து மட்டும் இரத்தம் வந்தது. காவல் துறையினர் தான் என்னை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். அபோது, விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்ற விபரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். நான் முதல் விசாரணையில் சொன்ன வயதான நபர் மீது மோதி, நான் தான் விபத்தை ஏற்படுத்தினேன் என்றாலும் அதில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தஞ்சாவூர் - புதுக்கோட்டை சாலையில், நான் சொல்லியுள்ள இடமே கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு வேறுவகையில், வேறு இடத்தில் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**